TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8035278

1. District மாவட்டம் : திருச்சி
PS: காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
Year: ஆண்டு 2017
FIR No.: மு.த.அ. எண் 10/2017
Date: நாள் 17.10.2017

2. (i) Act சட்டம்: கு.வி.மு.ச 1973 Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(d)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 16.10.17
Date to : நாள் வரை 16.10.17
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 16.15 hrs
Time to : நேரம் வரை 23.00hrs
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.10.17
Time : நேரம் 10.30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : கிழக்கு மேற்காக 4 கி.மீ வடக்கு
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address முகவரி : உதவி ஆணையர் (கணக்குகள்) பணி, மாநகராட்சி அலுவலகம், திருச்சி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு.சி.சத்யநாராயணன்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : சுப்ரமணியன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 12.06.72
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட தணிக்கை ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

— பின் பக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது —

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

காலம் 7–இல் கண்ட எதிரிகளின் பெயர்கள்

(1) திரு.பிரபுகுமார் ஜோசப், 56/2017, த/பெ. பரியஜோசப், உதவி ஆணையர் (கணக்கு), மாநகராட்சி அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
(2) திரு.ஜா.ராம்குமார் 39/17, த/பெ ஜானகிராமன், (டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்) எண்.24, வடக்கு பாய்க்கார தெரு, உறையூர், திருச்சி–3.
(3) திரு.ராஜேந்திரன், 50/17, த/பெ கோபால்பிள்ளை,(ஓட்டுனர்) எண்.3 80 அடி ரோடு, மாநகராட்சி குடியிருப்பு, தில்லைநகர், திருச்சி.
(4) திரு.பாலமுத்து 48/17, த/பெ சின்னத்தம்பி, (அலுவலக உதவியாளர்) 10/8, குண்டூர் பர்மா காலனி, ஏர்போர்ட், திருச்சி–7.
(5) திரு.தங்கராஜ் 68/17, த/பெ பொன்னுசாமி, (ஓய்வு) -(தனி நபர்), எண்.31, காவல்காரன்தெரு, தென்னூர், திருச்சி–17.

மற்றும் சில அடையாளம் தெரியாத நபர்கள்.

நான் (F.சேவியர் ராணி, காவல் ஆய்வாளர்) 17.10.2017 அன்று காலை 10.30 மணியளவில் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருச்சி மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.சத்யநாராயணன் அவர்கள் என் முன்பாக ஆஜராகி, திருச்சிராப்பள்ளி, மாநகராட்சி அலுவலகத்தில், 2 வது தளத்தில் அமைந்துள்ள

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. **Action taken** : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused investigation / transferred to PS ...................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

17/X/17

14. **Signature** / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் F. சேவியர் ராணி
Rank: நிலை ஆய்வாளர் No. எண் ..........

15. **Date & Time of despatch to the court:**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17.10.2017

* GCP-240-34(Type 2) 90,000 Cps 21 3 16(HCL-12)p 2

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.10/2017–இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.......

உதவி ஆணையர் (கணக்குகள்) அலுவலகத்தில் 16.10.2017 ஆம் தேதி நடத்தப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டி, மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளையும், திரு.ராம்குமார், தொகுப்பூதிய அலுவலர், கம்ப்யூட்டர் டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் என்பவரது வாக்குமூலத்தினையும் இணைத்து, 17.10.2017 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் மூலமாக கொடுத்தார். மேற்படி வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகள் பின்வருமாறு

அனுப்புநர் சு.சத்யநாராயணன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: திருச்சி மாநகராட்சி அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி. திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 16.10.2017ம் தேதி, மாலை சுமார் 15.45 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்தில், உதவி ஆணையர் (கணக்குகள்) பிரிவில் மாலை 16.15 மணி முதல் இரவு 23.00 மணிவரை திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது ரூ.1,39,960/– மற்றும் 42 கிராம் தங்க நாணயங்கள் (1 கிராம் 30 எண்ணிக்கை, 8 கிராம் ஒரு எண்ணிக்கை, 4 கிராம் ஒரு எண்ணிக்கை) கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேலும், மேற்படி அலுவலகத்தில் தொகுப்பூதிய பணியாளர் திரு.ராம்குமார் என்பவர் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி(மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 16.10.2017ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் மற்றும் ராம்குமாரின் வாக்குமூலம் ஆகியவை மேல்நடவடிக்கைக்காக இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள (கையொப்பம்) சு.சத்யநாராயணன். Sir, Received the petition and registered a case in Trichy V&AC Cr.No.10/2017 u/s 102 CRPc, 13(2) r/w 13(1)(d) of the PC Act 1988 on 17.10.2017 at 10.30 hrs. Sd.XXX(F.Xavier Rani), Ins/V&AC/Try.

**திடீர் சோதனை செயல்முறைகள்** இன்று 16.10.2017 மாலை சுமார் 16.30 மணிக்கு திருச்சி மாநகரம், பாரதிதாசன் சாலை, கேம்பியன் பள்ளி எதிரில், மூன்று தளங்களுடன் கூடிய அரசு கட்டிடத்தில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்தில் 2வது தளத்தில் உள்ள உதவி ஆணையர் (கணக்குகள்) அலுவலகத்தை திரு.சு.சத்தியநாராயணன், வயது 45/2017, த/பெ.சுப்ரமணியன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சி அவர்களால், திரு.பெ.பாலு, வயது 55/2017, த/பெ. பெரியண்ணன் நாடார், மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

ஊழல் தடுப்பு ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி மற்றும் அவர்களது குழுவினர் உதவிக் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.கு.ராமச்சந்திரன் அவர்கள் மேற்பார்வையில் மேற்கொள்ளும் திடீர் சோதனை செயல்முறைகள் நடவடிக்கைகள் பொருந்து அலுவலர்களின் மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்தில், 2வது தளத்தில் அமைந்துள்ள உதவி ஆணையர் (கணக்குகள்) அவர்களது அலுவலகத்தில், மூலதன நிதி, வருவாய் நிதி, பாதாள சாக்கடை வடிகால் நிதி மற்றும் குடிநீர் நிதி ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு. அந்த பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகைகள் காசோலையாக வழங்கப்படுவதாகவும், அவ்வாறு காசோலைகளை வழங்கும்பொழுது, மேற்படி ஒப்பந்ததாரர்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை கமிஷன் என்கிற அடிப்படையில் கையூட்டாக கேட்டு. அங்கு பணியாற்றும் பொதுப்பணியாளர்கள், அவ்வலுவலகத்தில் தினக்கூலி மற்றும் புள்ளி விபர தொகுப்பாளர்கள் மூலம் பெறுவதாகவும், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 16.10.2017 மாலை சுமார் 16.15 மணிக்கு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் மேற்படி ஆய்வுகுழு ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி அலுவலகமானது தெற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலகம் மூன்று தளங்கள் கொண்ட கட்டிடம் ஆகும். மேற்படி அலுவலக வளாகத்திற்கு நான்கு பக்கமும் சுற்றுச்சுவர்கள் அமைந்துள்ளது. மேற்படி சுற்றுச்சுவரில் தெற்கு பக்கம் மேற்கு பகுதியில் உள்ளே வருவதற்கும், கிழக்கு பகுதியில் வெளியே செல்வதற்கும் பிரதான வாயில்கள் அமைந்துள்ளது. கட்டிடத்தின் தெற்கு பக்கம் போர்ட்டிகோவும், தெற்கு மற்றும் வடக்கு புறத்தில் மத்திய பகுதியிலிருந்து முதல் மற்றும் இரண்டாவது தளங்களுக்கு செல்லும் படிகட்டுகள் அமைந்துள்ளது. கட்டிடத்தின் தரைத்தளத்தில் லிப்ட் அமைந்துள்ளது. மேலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி திட்டப் பிரிவு, வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம், தணிக்கை பிரிவு, ஆவணங்கள் காப்பகம் மற்றும் பொதுப்பிரிவுகள் மற்றும் சில அலுவலகங்கள் இயங்கி வருகிறது. முதல் தளத்தில் மேயர், துணை மேயர், பொது சுகாதார பிரிவுகள், பொறியியல் பிரிவுகள் மற்றும் சில அலுவலகங்கள் இயங்கி வருகிறது.

அங்கிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது க்ஷ நான்கு தனிநபர்களும் அந்த இடத்தைவிட்டு நழுவ முயற்சித்தார்கள். அவர்களை நிறுத்தி அவ்வலுவலகத்திற்குள் அவர்கள் வந்த விபரத்தை ஆய்வுக்குழு ஆய்வாளர் தனித்தனியாக விசாரித்தபோது க்ஷ நான்கு நபர்களும் அவர்களுடைய தனிப்பட்ட சொந்தப்பணி ஏதும்

இரண்டாவது தளத்தில் தெற்குபுறம் மேற்கு பகுதியில் ஆணையர் அறையும், கூட்ட அறைகளும் அடுத்தடுத்து அமைந்துள்ளது. கிழக்கு பகுதியில் உதவி ஆணையர் (கணக்குகள்) அலுவலகம் கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் முறையே மேற்கு மற்றும் வடக்கு பார்த்து வாயில்களுடன் அமைந்துள்ளது.

மேற்படி உதவி ஆணையர் (கணக்குகள்) அலுவலகத்திற்குள் கிழக்குப்புறம் கடைசியாக தடுக்கப்பட்ட ஒரு அறையில் உதவி ஆணையர் (கணக்குகள்) திரு.ம.பிரபுகுமார் ஜோசப் என்பவர் அமர்ந்திருந்தார். அந்த அறைக்குள் மூன்று பீரோக்கள் மற்றும் ஆவணங்கள் ஆங்காங்கே ரேக்குகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி அறையில் வடக்குப்புறம் கழிவறை அமைந்துள்ளது.

மேற்படி அறைக்கு வெளியே மேற்கு–கிழக்காக பெரிய ஹாலில் இரண்டுபுறமும் டேபிள் சேர்கள் போடபட்டு அவற்றில் வடக்கு புறம் கிழக்கிலிருந்து மேற்கு வரை தெற்கு நோக்கி பி3 இருக்கை உதவியாளர் / கணக்கர் திருமதி.மீனாட்சி, பி4 உதவியாளர் திருமதி.வசந்தி, பி5 இருக்கை இளநிலை உதவியாளர் திருமதி.செண்பகவள்ளி, பி9 இருக்கை உதவியாளர் திரு.மாசிலாமணி ஆகிய அலுவலர்களும், தெற்கு புறம் கிழக்கிலிருந்து மேற்கு வரை வடக்கு நோக்கி பி7 இளநிலை உதவியாளர் / காசாளர் திரு.பிரதீபன், பி6 உதவியாளர் / கணக்கர் திரு.ரவிச்சந்திரன், பி2 உதவியாளர் திருமதி.சித்ரா, பி8 உதவியாளர் திருமதி.ஜெயந்தி ஆகிய அலுவலர்களும் அமர்ந்திருந்தனர். மேற்படி ஹாலில் கிழக்கு புறம் மேற்கு நோக்கி கண்காணிப்பாளர் இருக்கை, அதனை அடுத்து கணினி ஆப்ரேட்டர்கள் திரு.ராம்குமார் மற்றும் திரு.வீரமணி ஆகியோர் இருக்கைகள் காலியாக உள்ளது. மேற்படி ஹாலிற்கும், உதவி ஆணையர் (கணக்குகள்) அறைக்கும் இடையே வடக்குபுறம் ஒரு அறையும், அதனை அடுத்து கிழக்கு புறம் கழிவறையும் அமைந்துள்ளது. மேற்படி அறையில் கணினி ஆப்ரேட்டர் திரு.ராம்குமார், உதவி ஆணையர் (கணக்குகள்) அவர்களின் ஜீப் எண். டிஎன்.45 பிகே 4335 வாகனத்தின் ஓட்டுநர் திரு.ராஜேந்திரன், அலுலவக உதவியாளர் திரு.பாலமுத்து மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலை கோட்டத்தில் காசாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற தற்போது தினக்கூலியாக இவ்வலுவலகத்தில் பணியாற்றும் திரு.தங்கராஜ் ஆகியோர் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தில், நான்கு பதிவேடுகளும், அதன் உள்ளே பட்டியல்கள் கோப்புகளும் காணப்பட்டது.

உடன், அங்கிருந்த உதவி ஆணையர் (கணக்குகள்) உட்பட அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது கூஷ வடக்கு புற அறையில் நின்று கொண்டிருந்த, மேற்படி திரு.ராம்குமார், திரு.ராஜேந்திரன், திரு.பாலமுத்து மற்றும்

திரு.தங்கராஜ் ஆகிய நான்கு நபர்களும் அந்த இடத்தைவிட்டு நழுவ முயற்சித்தார்கள். அவர்களை நிறுத்தி அவர்கள் அங்கிருந்து ஏன் நழுவ முயற்சித்தார்கள் என்கிற விபரத்தை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர், ஆய்வுக்குழு ஆய்வாளர் உதவியுடன் விஜிலென்ஸ் ஆய்வாளர் முன்னிலையில் தனித்தனியாக விசாரித்தபோது, அவர்களில் கணினி ஆப்ரேட்டர் திரு.ராம்குமார் தானாக முன்வந்து, உதவி ஆணையர் (கணக்குகள்) திரு.பிரபுகுமார் ஜோசப் அவர்கள் தன்னிடமும், ஜீப் ஓட்டுநர் திரு.ராஜேந்திரன், அலுவலக உதவியாளர் திரு.பாலமுத்து மற்றும் ஒய்வு பெற்ற அலுவலர் திரு.தங்கராஜ் ஆகியோரிடமும், மூலதன நிதி வருவாய் நிதி, பாதாள புதை வடிகால் நிதி மற்றும் குடிநீர் நிதி ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு, அந்த பணிகளை மேற்கொண்ட 29 ஒப்பந்ததாரர்களுக்கு பட்டியல் தொகைகளுக்குரிய காசோலைகள் ரெடியாக உள்ளதாகவும், அவற்றை வாங்குவதற்கு இன்று (16.10.2017) ஒப்பந்ததாரர்கள் வருவார்கள் என்றும், அவர்களிடம் தான் ஒவ்வொரு காசோலைக்கும் ஒரு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக (லஞ்சம்) கொடுத்துவிட்டு, காசோலையை பெற்றுக்கொள்ளும்படி சொல்லியுள்ளதாகவும் சொல்லி, அந்த காசோலைகளையும் தொடர்புடைய பட்டியல் கோப்புகளையும் எங்களிடம் கொடுத்து, ஒப்பந்ததார்களிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக (லஞ்சம்) பெற்றுக்கொண்டு, பட்டியல் கோப்புகளில் ஒப்பந்ததார்களிடம் ஒப்புதல் பெறும்படி சொன்னார். அதன்படி, மேற்படி 29 காசோலைகளில் 27 காசோலைகளை பெறுவதற்காக இன்று (16.10.2017) காலை 10.00 மணி முதல் மாலை சுமார் 4 மணி வரையில் தொடர்புடைய ஒப்பந்ததாரர்கள் வந்தார்கள். அவர்கள், அவரவர்களின் பட்டியல் தொகைக்கு ஏற்றவாறு ரூ.2,000/– முதல் ரூ.5,000/– வரை என பணத்தை என்னிடமும், மேற்படி திரு.ராஜேந்திரன், திரு.பாலமுத்து மற்றும் திரு.தங்கராஜ் ஆகியோரிடமும் கொடுத்துவிட்டு, பட்டியல்களில் ஒப்புதல் கையொப்பம் செய்துவிட்டு, காசோலையை எங்களிடமிருந்து பெற்றுச் சென்றார்கள். எந்தெந்த ஒப்பந்ததார்கள், எவ்வெவ்வளவு தொகையை (கமிஷன் / கையூட்டு) கொடுத்தார்கள் என்பது தற்போது ஞாபகமில்லை என்று சொல்லி, தான் வசூல் செய்த மேற்படி தொகையில் ரூ.2,500/– (500 x 5 = 2500/-) தொகையை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி தொகை ரூ.2,500/–ஐ கையூட்டு பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார். அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்து ரூ.120/– பணத்தை காண்பித்தார். அப்பணத்தை அவரையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியதால், அப்பணத்தை அவரே வைத்துக்கொண்டார். மேலும், திரு.ராம்குமார், தான் வசூல் செய்த மேற்படி தொகையில் (கமிஷன் / கையூட்டு)

ரூ.82,250/–ஐ உதவி ஆணையர் (கணக்குகள்) அறையில் உள்ள பீரோக்களில் தென்மேற்கு புறம் உள்ள இரண்டு பீரோக்களில் முறையே ரூ.21,500/– பணத்தையும், ரூ.60,750/– பணத்தையும் தனித்தனியாக வைத்துள்ளதாகவும், தன்னை அழைத்துச் சென்றால் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அதன்படி, மேற்படி திரு.ராம்குமாரை மட்டும் அழைத்துக்கொண்டு அவர் சொன்னபடி, மேற்படி உதவி ஆணையர் (கணக்குகள்) அறைக்கு சென்று, தென்மேற்குபுறம் முதலாவதாக இருந்த பீரோவை அவர் திறந்து, அதனுள் இருந்து (2000 x 9 = 18,000/- , 500 x 7 = 3,500/-) ரூ.21,500/– பணத்தையும், அதற்கு அடுத்து அருகே இருந்த மற்றொரு பீரோவை அவர் திறந்து, அதனுள் இருந்து (2000 x 30 = 60,000/-, 100 x 2 = 200/-, 50 x 11 = 550/-) ரூ.60,750/– பணத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். மேலும், மேற்படி இரண்டாவது பீரோவினுள் இருந்து, உதவி ஆணையர் (கணக்குகள்) திரு.பிரபுகுமார் ஜோசப் அவர்கள் தன்னிடம் கொடுத்து வைக்கச்சொன்ன 1 கிராம் தங்க காசுகள் (பெரியது 8 மற்றும் சிறியது 22) மொத்தம் 30 எண்ணிக்கை (30 கிராம்) அடங்கிய Damini the artisans of India www.daminiartisans.com என்கிற அடையாளம் உள்ள வெளிர் மஞ்சள் நிற பிளாஸ்டிக் டப்பாவையும், TANISHQ என அடையாளம் உள்ள சிறிய துணியாளான பர்சினுள் மேற்படி TANISHQ Invoice No.TRY/CM/4009 dated 15/10/2017, Customer Name: Ibrahim என ஆங்கிலத்தில் உள்ள இன்வாய்ஸ் மற்றும் TANISHQ Gold 22 KARAT 8g என அடையாளம் உள்ள ஒரு தங்க காசு கவர் செய்யப்பட்ட நிலையில் ஒரு மெரூன் கலர் பாக்ஸ் உடன் உள்ளதையும், இதேபோல் TANISHQ என அடையாளம் உள்ள சிறிய துணியாளான பர்சினுள் மேற்படி TANISHQ Invoice No.TRY/CM/4050 dated 16/10/2017, Customer Name: Ibrahim என ஆங்கிலத்தில் உள்ள இன்வாய்ஸ் மற்றும் TANISHQ Gold 22 KARAT 4g என அடையாளம் உள்ள ஒரு தங்க காசு கவர் செய்யப்பட்ட நிலையில் ஒரு மெரூன் கலர் பாக்ஸ் உடன் உள்ளதையும் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி மொத்த பணம் ரூ.82,250/– பணத்தையும், சுமார் 42 கிராம் எடையுள்ள 32 தங்க காசுகளும் கையூட்டாக பெற்ற பணமாக / பொருளாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மூன்று டப்பாக்கள் மற்றும் இரண்டு பைகளுடன் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார்.

மேற்படி தங்க காசுகளின் தரம் மற்றும் எடையை அறிவதற்காக காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி, மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர் திரு.பாலு மற்றும் தகவலின் பேரில் வந்திருந்த மாநகராட்சி பொறியியல் பிரிவில் உதவி பொறியாளராக பணியாற்றும் திருமதி.சங்கீதப்ரியா ஆகியோருடன் மேற்படி தங்க காசுகளை எடுத்துக்கொண்டு, சுமார்

மாலை 18.15 மணியளவில் புறப்பட்டு, திருச்சி, கண்டோண்மெண்ட் வில்லியம்ஸ் ரோட்டில் அமைந்துள்ள பெமினா ஜுவல்லரி மார்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு சென்று, மேற்படி தங்க காசுகளின் எடையை அங்கிருந்த மேலாளர் திரு.தௌபிக் என்பவர் மூலமாக உறுதி செய்து கொண்டு, எடை விபரங்களை 16.10.2017 தேதியிட்ட கடிதம் மூலம் பெற்றுக்கொண்டு, திரும்ப திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அலுவலகத்திற்கு மாலை சுமார் 18.45 மணிக்கு ஆய்வாளர் மேற்படி இரண்டு பேருடன் வந்தார். மேற்படி பெமினா ஜுவல்லரி மார்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் 16.10.2017 தேதியிட்ட கடிதத்தை காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார். உடன் மேற்படி கணினி ஆப்ரேட்டர் திரு.ராம்குமார் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் குழுவினர் முன்னிலையில் பதிவு செய்தார்.

இந்த செயல்முறைகளின் தொடர்ச்சியாக, மேற்படி உதவி ஆணையர் (கணக்குகள்) திரு.பிரபுகுமார் ஜோசப் அவர்களை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் விசாரிக்க, அவர், அவரது சட்டை மேல் வெளிப்பாக்கெட்டிலிருந்த (2000 x 4 = 8,000/-, 500 x 3 = 1,500/-, 50 x 10 = 500/-) ரூ.10,000/– பணத்தையும், அவரது பேண்டின் பின்புற பாக்கெட்டிலிருந்த பர்சை எடுத்து, அதனுளிருந்த ரூ.600/– பணத்தையும் தனித்தனியாக ஆஜர் செய்தார். மேற்படி தொகைகளில் ரூ.600/– பணம் அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அப்பணத்தை அவரையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியதால், அப்பணத்தை அவரே வைத்துக்கொண்டார். ஆனால், ரூ.10,000/– பணத்தைப் பற்றி அவர் சரியான விளக்கம் சொல்லாமல், மவுனமாக தலையை குனிந்தபடி இருந்தார். மேற்படி பணம் ரூ.10,000/– கையூட்டு பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார். உடன், மேலும் மேற்படி தங்க காசுகள் பற்றி கேட்க எவ்வித விளக்கமும் சொல்லாமல் மவுனமாக தலையை குனிந்தபடி நின்றார். அப்போது அவர், இந்த தங்க காசுகளை வாங்கி வைத்திருந்ததற்காக ஒப்புதல் ரசீதுகளோ, கோப்புகளோ, பதிவேடுகளோ மாநகராட்சி அலுவலகத்திலோ, எனது பிரிவு அலுவலகத்திலோ எதுவும் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். மேலும், தகவலின் படி அப்போது அங்கு வந்திருந்த மாநகராட்சி டவுன் பிளானிங் பிரிவில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றும் திரு.சிவபாதம் அவர்களிடம் மேற்படி தங்க காசுகள் தொடர்பாக விளக்கம் கேட்க, அவரும், தங்க காசுகள் தொடர்பாக ஒப்புதல் ரசீதுகளோ, கோப்புகளோ, பதிவேடுகளோ மாநகராட்சி அலுவலகத்திலோ, எனது பிரிவு அலுவலகத்திலோ எதுவும் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக, மேற்படி அலுவலக வளாகத்திற்கு வடக்குபுறம் நின்று கொண்டிருந்த மற்ற மூன்று நபர்களில், திரு.ராஜேந்திரன், வயது 50/2017, த/பெ

கோபால்பிள்ளை, ஓட்டுநர் (உதவி ஆணையர் (கணக்குகள்) அவர்களின் ஜீப்), திருச்சி மாநகராட்சி என்பவரை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் விசாரிக்க, அவர், அவரது பேண்ட்டின் வலதுபுற சைடு பாக்கெட்டிலிருந்த (500 x 20 = 10,000/-, 100 x 19 = 1,900/-, 50 x 2 = 100/-) ரூ.12,000/– பணத்தையும், அவரது சட்டையின் மேல் வெளிப்புற பாக்கெட்டிலிருந்த ரூ.300/– பணத்தையும் தனித்தனியாக ஆஜர் செய்தார். மேற்படி தொகைகளில் ரூ.300/– பணம் அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அப்பணத்தை அவரையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியதால், அப்பணத்தை அவரே வைத்துக்கொண்டார். ஆனால், ரூ.12,000/– பணத்தைப் பற்றி அவர் சரியான விளக்கம் சொல்லாமல், சற்று நடுக்கத்துடன் பதற்றமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.12,000/– கையூட்டு பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார்.

மேலும், மற்றொரு நபரான திரு.பாலமுத்து, வயது 48/2017, த/பெ சின்னதம்பி, அலுவலக உதவியாளர், உதவி ஆணையர் (கணக்குகள்) அலுவலகம், திருச்சி மாநகராட்சி என்பவரை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் விசாரிக்க, அவர், அவரது பேண்டின் வலதுபுற சைடு பாக்கெட்டிலிருந்த (500 x 28 = 14,000/-, 200 x 2 = 400/-, 100 x 25 = 2,500/-, 50 x 2 = 100/-) ரூ.17,000/– பணத்தையும், அவரது சட்டையின் மேல் வெளிப்புற பாக்கெட்டிலிருந்த ரூ.460/– பணத்தையும் தனித்தனியாக ஆஜர் செய்தார். மேற்படி தொகைகளில் ரூ.460/– பணம் அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அப்பணத்தை அவரையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியதால், அப்பணத்தை அவரே வைத்துக்கொண்டார். ஆனால், ரூ.17,000/– பணத்தைப் பற்றி அவர் சரியான விளக்கம் சொல்லாமல், சற்று நடுக்கத்துடன் பதற்றமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.17,000/– கையூட்டு பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார்.

மேலும், மற்றொரு நபரான திரு.தங்கராஜ், வயது 68/2017, த/பெ பொன்னுசாமி, காசாளர் (பணி ஓய்வு), மாநகராட்சி பொன்மலை கோட்டம், திருச்சி மாநகராட்சி வீட்டு முகவரி. எண்.31, காவல்காரன் தெரு, தென்னூர், திருச்சி–17 என்பவரை மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் விசாரிக்க, அவர், அவரது பேண்டின் வலதுபுற சைடு பாக்கெட்டிலிருந்த (2000 x 1 = 2,000/-, 500 x 7 = 3,500/-) ரூ.5,500/– பணத்தையும், அவரது பேண்டின் இடதுபுற சைடு பாக்கெட்டிலிருந்த (500 x 10 = 5,000/-) ரூ.5,000/– பணத்தையும், அவரது சட்டையின் மேல் வெளிப்புற பாக்கெட்டிலிருந்த ரூ.710/– பணத்தையும் தனித்தனியாக ஆஜர் செய்தார். மேற்படி தொகைகளில் ரூ.710/– பணம் அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்ததால் அப்பணத்தை அவரையே

வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியதால், அப்பணத்தை அவரே வைத்துக் கொண்டார். ஆனால், மேற்படி பேண்ட் பாக்கெட்டுகளிலிருந்த மொத்தப் பணம் ரூ.10,500/–ஐ பற்றி அவர் சரியான விளக்கம் சொல்லாமல், சற்று நடுக்கத்துடன் பதற்றமாக இருந்தார். மேற்படி பணம் ரூ.10,500/– கையூட்டு பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார்.

பின்னர், மேற்படி அலுவலக வளாகத்தில் கண்காணிப்பாளர் இருக்கைக்கு அருகே இருந்த ஜெராக்ஸ் மிஷின் டேபிளின் மேல் 500, 200, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுகளாக பணம் இருந்தது. அவ்வாறு இருந்த பணம் பற்றி அவ்வலுவலகத்தில் பணியில் இருந்த மேற்படி அலுவலர்களிடமும், அங்கிருந்த மேற்படி தனி நபர்களிடமும் மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் கேட்க, அவர்கள் யாரும், அந்த பணத்திற்கு உரிமை கோரவில்லை. ஆகையால், மேற்படி 500, 200, 100, 50, 20, 10 ரூபாய் நோட்டுகளை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் (500 x 2 = 1,000/-, 200 x 5 = 1000/-, 100 x 4 = 400/-, 50 x 5 = 250/-, 20 x 1 = 20/-, 10 x 2 = 20/-) ரூ.2,690/– இருந்தது. மேற்படி பணம் ரூ.2,690/– யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றினார்.

அதனை அடுத்து, அலுவலக ஹாலில் இருந்த மேற்படி அலுவலர்களிடம் வேறு பணம் எதுவும் இருக்கிறதா என்று கேட்க, அவர்கள் அனைவரும் தங்களது சொந்தப்பணத்தை தவிர வேறு பணம் எதுவும் தங்களிடம் இல்லை என்று சிறு சிறு தொகைகளை எடுத்து காண்பித்தார்கள். அந்த தொகைகள் அவர்களது சொந்த பணம் என்று சொன்னதால், அந்த பணத்தை அவரவர்களையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தியதால், அவரவர்களுடைய பணத்தை அவரவர்களே வைத்துக்கொண்டார்கள்.

மேற்படி அலுவலகத்தில் காசாளார் திரு.பிரதீபன் என்பவரிடமிருந்து (1) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஒப்புதல் பதிவேடு–2017 (288 பக்கம் உள்ளதில் 95 பக்கங்கள் வரை பதிவுகள் உள்ளது), (2) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சில்லறை செலவின பதிவேடு–2017 (51 பக்கங்கள் உள்ளதில் 27 பக்கம் வரை பதிவுகள் உள்ளது), (3) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சில்லறை செலவின பதிவேட்டின் நடப்பு குறிப்பு–2017 மற்றும் (4) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நிரந்தர முன்பண பதிவேடு–2017 தொகுப்பு–2 (50 பக்கங்கள் உள்ளதில் 14 பக்கம் வரை பதிவுகள் உள்ளது) ஆகிய 4 ஆவணங்களையும், கண்காணிப்பாளர் (கணக்கு) கூடுதல் பொறுப்பு பி3 உதவியாளர் திருமதி.எஸ்.மீனாட்சி என்பவரிடமிருந்து (1) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வருகைப் பதிவேடு நடப்பு குறிப்பு கணக்குப் பிரிவு –2017 (13.10.2017 ம் தேதி வரை பதிவுகள் உள்ளது), (2) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தற்செயல் விடுப்பு பதிவேடு கணக்குப்பிரிவு–2017 (52

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.10/2017–இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.......

பக்கங்கள் உள்ளதில் 27 பக்கம் வரை பதிவுகள் உள்ளது) மற்றும் (3) திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அனுமதி வருகை பதிவேடு கணக்குப்பிரிவு–2017 (26 பக்கங்கள் உள்ளதில் 9 பக்கம் வரை பதிவுகள் உள்ளது) ஆகியவற்றையும், மூலதன நிதி தொடர்புடைய பதிவேடான (4) Accounts Section Capital Fund Payaments Book- 2017-2018 (Volume-II) (200 பக்கங்கள் உள்ளதில் 29 பக்கங்கள் பதிவுகள் உள்ளது) பதிவேடு மற்றும் இந்த நிதி தொடர்பான கீழ்கண்ட மொத்தம் 10 பட்டியல்களையும் ஆக மொத்தம் 14 ஆவணங்களை எடுத்து ஆஜர் செய்தார்கள்.

**Tiruchirappalli City Corporation Bank Payment Voucher**

| Sl.No. | BPV.No. dated 16.10.2017 | Amount Rs. | Cheque No. | In favour of Contractor Name/Company |
|---|---|---|---|---|
| 1. | 455 (CF) | 9,05,763/- | 662487 | K.Chinnasamy |
| 2. | 456 (CF) | 8,11,079/- | 662488 | M/s. Velan Builders Pvt Ltd |
| 3. | 457 (CF) | 8,25,895/- | 662489 | M.Baburaj |
| 4. | 458 (CF) | 79,356/- | 662490 | S.Mamundy |
| 5. | 459 (CF) | 1,25,996/- | 662491 | M.Kumar |
| 6. | 461 (CF) | 7,28,997/- | 662493 | R.Ramasamy |
| 7. | 462 (CF) | 7,30,056/- | 890258 | S.Ramesh |
| 8. | 463 (CF) | 4,88,783/- | 890258 | S.Ramesh |
| 9. | 464 (CF) | 41,52,644/- | 000211 | VKJ Constructions, Trichy |
| 10. | 465 (CF) | 4,10,657/- | 726476 | C.Pattabiraman |

மேலும், பி6 உதவியாளர் / கணக்கர் திரு.ஆர்.ரவிச்சந்திரன் என்பவரிடமிருந்து வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் பாதாள புதை வடிகால் நிதி தொடர்புடைய பதிவேடுகளான (1) RF Payments Book -2017-2018 (Volume-I) (200 பக்கங்கள் உள்ளதில் 158 பக்கங்கள் பதிவுகள் உள்ளது), (2) UGD Payments Book-2017-2018 (Volume-I) (100 பக்கங்கள் உள்ளதில் 36 பக்கங்கள் பதிவுகள் உள்ளது) மற்றும் (3) WS Payments Book-2017-2018 (Volume-I) (100 பக்கங்கள் உள்ளதில் 62 பக்கங்கள் பதிவுகள் உள்ளது) ஆகியவற்றையும் மேற்படி நிதிகள் தொடர்புடைய கீழ்கண்ட மொத்தம் 17 பட்டியல்களையும் ஆக மொத்தம் 20 ஆவணங்களை எடுத்து ஆஜர் செய்தார்.

## Tiruchirappalli City Corporation Bank Payment Voucher

| Sl.No. | BPV.No. dated 16.10.2017 | Amount Rs. | Cheque No. | In favour of Contractor Name/Company |
|---|---|---|---|---|
| 1. | 72 (UGD fund) | 7,43,542/- | 879408 | M/s Power Electricals works |
| 2. | 73 (UGD fund) | 6,81,070/- | 879409 | T.Senthilnathan |
| 3. | 74 (UGD fund) | 1,38,977/- | 879410 | M.Baburaj |
| 4. | 1225 (RF) | 2,89,883/- | 688759 | K.Ramasamy |
| 5. | 1226 (RF) | 1,14,228/- | 688760 | M.Kumar |
| 6. | 1228 (RF) | 8,93,358/- | 808454 | M/s.Sangaranthi & Co |
| 7. | 1229 (RF) | 10,47,754/- | 808455 | K.Samikannu |
| 8. | 1230 (RF) | 67,975/- | 808456 | A.G.Ilamylan |
| 9. | 1231 (RF) | 26,500/- | 808456 | A.G.Ilamylan |
| 10. | 316 (WS Fund) | 7,40,715/- | 690537 | M.Ganesan |
| 11. | 317 (WS Fund) | 12,69,592/- | 690538 | M.Nagarajan |
| 12. | 318 (WS Fund) | 2,26,875/- | 690539 | AGR Constructions, Trichy |
| 13. | 319 (WS Fund) | 56,651/- | 690540 | D.Gopalakrishnan |
| 14. | 320 (WS Fund) | 1,58,218/- | 690541 | Rasithsiraj |
| 15. | 321 (WS Fund) | 6,73,662/- | 690542 | K.Chinnasamy |
| 16. | 322 (WS Fund) | 25,856/- | 000052 | G.R.Elangumaran |
| 17. | 323 (WS Fund) | 22,704/- | 000052 | G.R.Elangumaran |

மேற்படி 3 அலுவலர்களும் ஆஜர் செய்த மொத்தம் (பதிவேடுகள்–11, பட்டியல்கள்–27) மொத்தம் 38 ஆவணங்களையும் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் மேல் நடவடிக்கைகாக கைப்பற்றினார்.

மேலும், இவ்வலுவலகத்தில் ரொக்கமாக அரசுப் பணம் எதுவும் எந்தவித பிரிவிலும் இருப்பில் இல்லை என்கிற விபரம், மேற்படி அலுவலர்கள் சொன்னதின்படியும், மேற்படி ஆவணங்களை பார்வையிட்டதிலிருந்தும் தெரியவந்தது.

இந்த திடீர் சோதனை செயல்முறை இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. (திடீர் சோதனை செயல்முறைகளில் 12 பக்கங்களின் அடியில் திரு.சத்யநாராயணன், மாவட்ட துணைஆய்வுகுழு அலுவலர், திரு.பாலு, மாவட்ட ஆய்வுகுழு ஆய்வாளர், திருமதி.சேவியர்

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.10/2017–இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.......

ராணி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி ஆகியோரின் கையொப்பம்) மற்றும் 12வது பக்கத்தில் மட்டும் மேற்படி அலுவலர்களுடன், திரு.ராமச்சந்திரன், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி, திரு.பிரபுகுமார்ஜோசப், உதவி ஆணையர் (கணக்கு), திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, திரு.ராம்குமார், டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர், திரு.பாலமுத்து, அலுவலக உதவியாளர், திரு.இராஜேந்திரன், ஓட்டுனர், திரு.தங்கராஜ், காசாளர் (ஓய்வு), திரு.பிரதீபன், இளநிலை உதவியாளர் (காசாளர்), திருமதி.மீனாட்சி, கண்காணிப்பாளர், திரு.ரவிச்சந்திரன் (கணக்கர்), உதவியாளர், திரு.சிவபாதம், உதவி செயற்பொறியாளர், திருமதி.சங்கீத ப்ரியா உதவி பொறியாளர் மற்றும் கணினியில் தட்டச்சு செய்த தலைமைக்காவலர் திரு.ரெங்கநாதன் ஆகியோரது கையொப்பம்).

மேற்படி திடீர் சோதனை செயல்முறையில் கண்டுள்ள நபர்களான எதிரி 1)திரு.பிரபுகுமார்ஜோசப், உதவி ஆணையர் (கணக்கு), திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 2)திரு.ராம்குமார் (தனி நபர்), டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 3)திரு.பாலமுத்து, அலுவலக உதவியாளர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 4)திரு.இராஜேந்திரன், ஓட்டுனர், உதவி ஆணையரின்(கணக்கு), திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 5)திரு.தங்கராஜ், காசாளர் (ஓய்வு) (தனி நபர்), பொன்மலை கோட்டம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மற்றும் பல அடையாளம் தெரியாக நபர்கள் மீது திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2017, ச/பி 102 கு.வி.மு.ச. மற்றும் 13(2) உ/இ 13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988–ன்படி இன்று 17.10.2017 தேதி காலை 10.30 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், திருச்சி மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.சு.சத்யநாராயணன் அவர்கள் கொடுத்த 17.10.2017 தேதியிட்ட கடிதம் 16.10.2017 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் மற்றும் திரு.ராம்குமார், தொகுப்பூதிய அலுவலர், கம்ப்யூட்டர் டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர் என்பவரது வாக்குமூலம் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையின் நகல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை இவ்வழக்கின் மேல் விசாரணைக்காக திரு.ம.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர், ஊ.த.க. பிரிவு, திருச்சி அவர்களிடம் ஒப்படைத்தும், இதா நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

Insp. V&AC Try
[F.XAVIER RANI] 17/10/17.